அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

எல்லாம் செயல் கூடும்

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

# தீப நெறி

தீபம் 8 நெறி 5 தமிழ் மாத இதழ் விலை ₹1 டிசம்பர் 2017




எல்லா உயிரும் என்உயிர் ஆயின...!

எல்லா உலகமும் என்உலகம் ஆயின...!!

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

வள்ளல் மலரடி வாழ்க!! வாழ்க!!!



தருமம் செய்பவர்

## வாழ்த்தி வணங்குகிறோம்

தீபம் அறக்கட்டளையின் தற்போது புதிய உறுப்பினராக பொறுப்பேற்றிருக்கும் சன்மார்க்க சீலர் வேளச்சேரி

**திலிப்குமார்**
**ராதிகா திலிப்குமார்**

தம்பதியினரை வாயார வாழ்த்தி வணங்குகின்றோம்.

## வாயார வாழ்த்துகின்றோம்

சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளை அலுவலகப்பணியிலும் மற்றும் ஆன்மநேயப் பணியிலும் ஓயாது ஓடி–ஓடி உழைக்கும் தீபத்தின் இளம் சேவகன் தயவுமிகு

தளபதி **சிவா**

அவர்களை வாழ்த்தி தலை வணங்குகின்றோம்.



தொண்டு செய்பவர்

## “ தீபநெறி ” ஆசிரியர் குழு





**கே.என். உமாபதி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
கே.கே. நகர், சென்னை.
கைபேசி : 95518 49757



**செ. கதிர்வேல்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
ஈரோடு.
கைபேசி : 98659 39896



**இர. கங்கை மணிமாறன்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
கங்காதரபுரம், மயிலாடுதுறை.
கைபேசி : 94434 08824



**அர. இலட்சுமணசாமி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
இராணிப்பேட்டை.
கைபேசி : 80564 38488



**மு. பாலகிருஷ்ணன்**
தணிக்கை & வெளியீட்டாளர்
தீபநெறி மாத இதழ்.
கைபேசி : 94440 73635



**ஜோதி சதுரகிரியார்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
வேளச்சேரி, சென்னை.
கைபேசி : 89393 76652

# தாய்



"பெற்ற தாய் தனை மக(ன்) மறந்தாலும்"... என்று திருஅருட்பிரகாச வள்ளலார் எழுதுகிறார். உலகரிடையே எத்தனையோ விதிகள் இருந்தாலும் சில இடங்களில் சிலர் அதை மீறுவதுண்டு. இந்தப் பாடலில் வள்ளலாரின் குறிக்கோள் என்ன எனப் பார்க்கும் போது நமசிவாயத்தை நான் மறவேனே என்பதை சொல்ல விழைந்தது தெரிகிறது. ஆனால் பேருபதேசம், உரைநடைப் பகுதிகளில் நான் சைவத்தில் வைத்திருந்த பற்று இவ்வளவு என்று சொல்ல முடியாது. ஆனால் என்னை அது மேலேற்றி விடவில்லை. அப்போது எனக்கு அற்ப அறிவாக இருந்தது. என்னை ஏறாநிலை மிசைக்குஏற்றி வைத்தது "தயவு" ஒன்றுதான் என்கிறார்!.

மேற்சொன்ன பாடலில் "பெற்ற தாய்தனை மக மறந்தாலும், பிள்ளையைப் பெறும் தாய் மறந்தாலும், உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும், உடலை மேவிய உயிர் மறந்தாலும், கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும், கண்கள் நின்று இமைப்பது மறந்தாலும்" என்று ஆறு விதமான நித்தியங்கள் அநித்தியமானாலும் கூட "நற்றவத்தவர் உள்ளிருந்து ஓங்கும் நமசிவாயத்தை நான் மறவேனே" என்ற உறுதிப்பாடு நித்தியமானது என்கிறார்.

சூரியன் கிழக்கில் உதிக்கிறது. இது மேலோட்டமான உண்மை. ஆனால் அது உதிப்பதுமில்லை. மறைவதுமில்லை. பூமிதான் மேற்கிலிருந்து கிழக்காகச் சுற்றுகிறது என்பது அப்பட்டமான உண்மை. இது யதார்த்தம் எனப்படும். ( Reality / Actuality) எனவே இந்தப்பாடலை பார்க்கும்போது, பல குடும்பங்களில் பெற்ற தாயை, பிள்ளைகள் மறந்து விடுகின்றனர் என்பது யதார்த்தம். இது இப்போது புதிதாக நடக்கவில்லை. வள்ளலார் காலத்திலும் அதற்கு முன்பும் நடந்திருக்கிறது.

இன்றைக்கு பெற்றோரை கைவிடும் பிள்ளைகளின் மீது வழக்கு தொடரலாம் என்று சட்டம் இருக்கிறது. சட்டத்தை மீறுபவர்கட்கு தண்டனையும் உண்டு. இது நாம் பார்க்கும் செய்தி. ஆனால்? அல்லலுறும் ஆயிரம் பெற்றோரில் ஏதோ ஒருவர் வேண்டுமானால் வழக்கு தொடுத்திருக்கலாமே தவிர, அதற்கு மேலிருக்க வாய்ப்பில்லை. தாய்மார்கள் தன் பிள்ளை மீது வழக்கு தொடுப்பது அபூர்வம். காரணம் அவள் தாய்! தன் மகனை எந்த விதத்திலும் தனிமைப்படுத்தவோ, இன்னல்படுத்தவோ, பிறர் முன்னால் தாழ்மைப் படுத்தவோ விரும்புவதேயில்லை. ஈன்றெடுத்து பல்லாண்டுகள் ஆனாலும் அவனைதான் நெஞ்சிலும், நினைவிலும் அவள் சுமந்து கொண்டேயிருப்பதுதான் அதற்குக் காரணம். பரவாயில்லை, பட்டினி கிடக்கிறேன். வீட்டைவிட்டு துரத்தினாலென்ன? அனாதை விடுதிகள், மரத்தடி, நடைபாதை, பஸ் நிலையம், கோயில்வாசல், கடை வீதிகளில் வாழ்ந்து கொள்கிறேன். என்மகன், அவன் குடும்பம் மகிழ்ச்சியாயிருக்கும் செய்தியை அன்றாடம் கேட்டு ஆனந்தமாய் உறங்குகிறேன், என்று எண்ணற்ற தாய்மார்கள் நம் கண்முன்னே வாழ்கின்றனர்.

அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றவளை மருத்துவர் "பிள்ளை யாரும் வரலியாம்மா? தனியேஇப்படி தள்ளாடி வற்றியே வீடு எங்கே இருக்கு" எனக் கேட்டார். அதைக் கேட்ட வாட்ச்மேன் "டாக்டரய்யா இந்தத் தெருவுலதான் புள்ள இருப்பது, இந்த அன்னையின் இல்லம். இந்த அன்னை இருப்பதோ அனாதை இல்லம். அவரு வரமாட்டாரு. நாளைக்கு Mother's Day விழாவுல பேசறாரே அவர்தானுங்க இவுங்க புள்ள" என்றார்.

**வித்தியல் ஒன்றாய் விளைவியல் பலவா**
**அத்தகை அமைத்த அருட்பெருஞ்ஜோதி (630)**

தொட்டிலில் இட்டு ஆராரோ பாடியவளுக்கு இன்று யார் யாரோ சோறு போடுகிறார்கள். நிலவைக்காட்டி சோறு ஊட்டியவளுக்கு, இன்று கண்பூத்து நிலவு போல் வெளுத்து விட்டது. முதல் முதலில் பள்ளியில் மகனைச் சேர்க்கும்போது மற்றப் பிள்ளைகட்கு மிட்டாய் கொடுத்த அன்னைக்கு, இன்று மரத்தடியே சொத்தாகிவிட்டது. பையன் படிக்கணும், நல்ல வேலைக்குப் போகணும், கல்யாணம் ஆகணும் என்று கோயில் குளம் சுற்றி வந்து, உண்டியில் சில்லரைகளைக் கொட்டிய தாய், இன்று வீதியில் போவோர் எறியும் சில்லரைகளைச் சேர்த்தெடுத்து வாழ்க்கை நடத்துகிறாள்.

எமனுடன் போராடும் அவளிடம் இன்னொரு அனாதைக்கிழவி வந்து "அம்மா இன்னும் நீ பத்துநாள் கூட இருக்க மாட்டேனு நினைக்கிறேன். உன் பிள்ளைகிட்ட நான் போய் என்ன சொல்லட்டும்" என்று கேட்க அவள் சொன்னாள். "பெயரிடப்படாத அவனை என் கருவில் சுமந்த போது கண்ணே, மணியே என்று அழைத்துக் களித்தேன். பிறந்த பிறகு அவன் தந்தையும், உறவினரும் அவனுக்கு பெயரிட்டனர். அவன் பெயரை என் கல்லறை மீது எழுதி வைத்தால் அந்தப் பெயரைச் சுமப்பதில் பெருமகிழ்ச்சியடைவேன்" என்றாள். **கருவறையில் சுமந்ததினும் பெரிதுவந்தாள் மகனின் பெயரை கல்லறையில் சுமக்க விழைந்த தாய்.**



**K.N. உமாபதி**
K.K. நகர் - 95518 49757

# திருஅருட்பா

## ஆறாம் திருமுறை முற்றோதல்

ஆன்மநேய ஒருமைப்பாட்டு உள்ளம் கொண்ட அன்பு சகோதர, சகோதரிகளுக்கு தீபம் அறக்கட்டளையின் வந்தனங்கள் பல. சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலையில் வருகின்ற 30.12.2017 சனிக்கிழமை மாலை 5.00 மணிமுதல் 01.01.2018 திங்கட்கிழமை மாலை 5.00 மணிவரை திருஅருட்பா ஆறாம் திருமுறை **முற்றோதல்** நடைபெற உள்ளது.

அது சமயம் கிடைப்பதற்கரிய இந்த மானிடப்பிறவியில் சன்மார்க்க சொந்தங்களும், சான்றோர்களும் சாலை சம்பந்திகளும் மற்றும் தயவாளர்களும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் பெருங்கருணையின் பேரின்பத்தைப் பெற்று இன்புற்று வாழ தங்கள அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: வெளியூரிலிருந்து வருகைதரும் அன்பர்கள் அனைவருக்கும் 2 நாட்களுக்கு உணவு, தங்குமிடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாள்:
**30.12.2017** - சனிக்கிழமை மாலை 5 மணி முதல்
**01.01.2018** - திங்கட்கிழமை மாலை 5 மணி வரை

இடம்:
**நித்ய தீப தருமச்சாலை**
7/8, புத்தேரிக்கரைத் தெரு, தண்டீஸ்வரம் கோவில் அருகில்,
வேளச்சேரி, சென்னை - 600 042.

நிர்வாகிகள்
**தீபம் அறக்கட்டளை**
வேளச்சேரி, சென்னை - 42.
தொடர்புக்கு
**ஜோதி சதுரகிரியார்**
8939376652

**விளைவியல் அனைத்தும் வித்திடை அடங்க**
**அளவு செய்து அமைத்த அருட்பெருஞ்ஜோதி (632)**

# நடமாடும் நித்ய தீப அன்ன தருமச்சாலை...





சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் நடமாடும் நித்ய தீப அன்ன தருமச்சாலை மூலம் வேளச்சேரி சுற்று வட்டாரப்பகுதியில் பசியால் வாடும் வறியவர்களுக்கு தினசரி பசியாற்றுவிக்கப்படும் காட்சி.

**வித்தும் பதமும் விளை உப கரிப்பும்**
**அத்திறல் அமைத்த அருட்பெருஞ்ஜோதி (634)**

## சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் கன்னியாகுமரி ஒக்கி புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரணப் பொருட்கள் வழங்கப்படும் காட்சி.













**வித்திடை முளையும் முளையிட விளைவும்**
**அத்தக அமைத்த அருட்பெருஞ்ஜோதி (636)**

# மரணம் என்றால் என்ன? மரணம் இல்லா பெருவாழ்வு என்றால் என்ன?

மரணம் என்பது - நம் பஞ்ச பூத உடம்பானது உயிரையும் ஆன்மாவையும் உள்ளே வைத்து இயங்கிக் கொண்டு இருக்கின்றன. உடம்பான உறுப்புக்கள் தன் சக்தியை இழக்கின்ற போது, உயிரும் ஆன்மாவும் உடம்பை விட்டு வெளியே சென்று விடுகின்றது அல்லது இயக்கத்தை நிறுத்திக் கொள்கிறது. அப்போது உடம்பின் இயக்கம் நின்று விடுகின்றது. அதற்கு மரணம் என்று பெயர். மரணம் அடைந்தால் மீண்டும் ஆன்மாவும் உயிரும் வேறு உடம்பு எடுத்து வாழத் தொடங்குகின்றது. இதற்கு பிறப்பு இறப்பு என்று சொல்லப்படுகின்றது.

சிவ சித்தர்கள் யோகிகள் தங்கள் தவ வலிமையால் நீண்ட நாட்கள் பல நீண்ட வருடங்கள் உடம்பை விடாமல் சமாதி நிலை அடைகின்றார்கள். கூடுவிட்டு கூடுபாயும் வித்தையும் அறிந்து உடம்பையும் உயிரையும் ஆன்மாவையும் தக்கவைத்து தங்களுக்குத் தேவையான வகையில் பயன்படுத்தி வாழ்ந்தார்கள். அந்த வித்தையின் காலம் முடிந்தவுடன் மறுபடியும் உயிரையும் ஆன்மாவையும் தக்க வைக்க முடியாமல் உடம்பை விட்டு உயிரும் ஆன்மாவும் பிரிந்து இறுதியில் மரணம் அடைந்து மீண்டும் பிறப்பு எடுக்கின்றார்கள்.

வள்ளலார் சொன்ன மரணம் இல்லாப் பெருவாழ்வு என்பது வேறு!

உடம்பையும் உயிரையும் ஆன்மாவையும் பிரிக்காமல் மண்ணிற்கோ தண்ணிருக்கோ தீயுக்கோ காற்றுக்கோ ஆகாயத்திற்கோ கிரகங்களுக்கோ வேறு அபாயங்களுக்கோ எதற்கும் இரையாக்காமல் ஒளி தேகமாக மாற்றும் அருள் அறிவியலை கண்டு பிடித்தவர்தான் வள்ளலார். அதற்கு வேதியல் மாற்றம் என்று பெயர். இறைவனிடம் பூரண அருளைப் பெற்றால் மட்டுமே உடம்பை ஒளி உடம்பாக மாற்ற முடியும். கடவுள் நிலையை அறிய முடியும். அதன் மயமாக மாற முடியும்.

இங்குதான் பிரச்சனையே ஆரம்பிக்கினறது. எந்தக் கடவுளிடம் அருளைப் பெறமுடியும். அருளை வழங்கும் கடவுள் யார்? என்பதை தேடிக் கண்டு பிடித்தவர் வள்ளலார். பொய்யானக் கடவுள்களை விட்டு மெய்யான கடவுளைக் கண்டுபிடித்தார். அவர்தான் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என்னும் உண்மைக் கடவுளாகும், கண்டேன், களித்தேன், களிப்புற்றேன் கலந்து கொண்டேன் என்கிறார்.

அந்தக் கடவுள் எங்கு இருந்து செயல்படுகின்றார் என்பதை ஆயிரக்கணக்கான பாடல்களிலும் உரை நடைப் பகுதியிலும் தெளிவாக விளக்கி உள்ளார்.

அறிவு உள்ளவர்களுக்கு ஒரு பாடலே போதும்!

அருட்பெருவெளியில் அருட்பெரு உலகத்து
அருட்பெருந் தலத்து மேல் நிலையில்
அருட்பெரும் பீடத்து அருட்பெரு வடிவில்
அருட்பெருந் திருவிலே அமர்ந்த
அருட்பெரும் பதியே அருட்பெரு நிதியே
அருட்பெருஞ் சித்திஎன் அமுதே
அருட்பெருங் களிப்பே அருட்பெருஞ் சுகமே
அருட்பெருஞ் ஜோதிஎன் அரசே!

என்ற பாடல் வாயிலாக தெரியப்படுத்துகின்றார். அந்த அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தத்துவங்களைக் கடந்தவர் என்றும் தெரியப் படுத்துகின்றார்.

தத்துவம் அனைத்தும் தனித்தனி கடந்தேம்
தத்துவா தீதமேல் நிலையில்
சித்தியல் முழுதும் தெரிந்தனம் அவைமேல்
சிவநிலை தெரிந்திடச் சென்றேன்
ஒத்தஅந் நிலைக்கண் யாமும் எம்உணர்வும்
ஒருங்குறக் கரைந்துபோயினம்என்று
அத்தகை உணர்ந்தோர் வழுத்தநின்றோங்கும்
அருட்பெருஞ்ஜோதி என் அரசே!

என்றும் தெரியப்படுத்துகின்றார். அந்த உண்மைக் கடவுளான அருட்பெருஞ்ஜோதியைத் தொடர்பு கொண்டால் மட்டுமே அருளைப் பெற்று மரணத்தை வெல்ல முடியும். உடற்பிணி அனைத்தையும் உயிர்ப்பிணி அனைத்தையும் அடர்ப்பறத் தவிர்த்த அருட்சிவ மருந்தே! என்றும்... மரணப் பெரும் பிணி வாரா வகைமிகு கரணப் பெருந்திறல் காட்டிய மருந்தே! என்பதை அருட்பெருஞ்ஜோதி அகவலில் தெளிவாக தெரியப்படுத்துகின்றார் வள்ளலார்.

உடம்பையும் உயிரையும் அழிக்காமல் மாற்றும் வல்லபம் அருள் என்னும் திரவியத்திற்கு மட்டுமே உண்டு. அந்த அருளைப் பெற வேண்டுமானால், சாதி சமய மதம் என்னும் கொள்கைகளை தூக்கி எறிந்து விட்டு, வள்ளலார் சொல்லிய சுத்த சன்மார்க்க கொள்கைகளை நான்கு விதமான ஒழுக்கங்களை பின்பற்ற வேண்டும்.

அந்த ஒழுக்கம் தான் ஜீவகாருண்ய ஒழுக்கம் என்பதாகும். அதிலே இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் என்ற நான்கு

**வித்தினுள் வித்தும் வித்ததில் வித்தும்**
**அத்திறம் வகுத்த அருட்பெருஞ்ஜோதி (638)**

ஒழுக்கங்களையும் முழுமையாக கடைபிடித்தால் மட்டுமே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் அருளை வாரி வழங்குவார். அருளைப் பெற்றுத்தான் உடம்பையும் உயிரையும் ஒளியாக மாற்றி மரணத்தை வெல்ல முடியும். அருளைப் பெற்றால் உடம்பு, உயிர் எவ்வாறு மாற்றம் அடையும் என்பதை அருட்பெருஞ்ஜோதி அகவலில் தெளிவாக படம் பிடித்துக் காட்டுகின்றார்.

தோலெலாம் குழைந்திடச் சூழ்நரம் பனைத்தும்
மேலெலாம் கட்டவை விட்டுவிட்டு இயங்கிட - 1450

என்பெலாம் நெக்குநெக்கு இயலிடை நெகிழ்ந்திட
மென்புடைத் தசையெலாம் மெய்யுறத் தளர்ந்திட-1452

இரத்தம் அனைத்தும் உள்ளிறுகிடச் சுக்கிலம்
உரத்திடைப் பந்தித்து ஒருதிர ளாயிட - 1454

மடலெலாம் மூளை மலர்ந்திட அமுதம்
உடலெலாம் ஊற்றெடுத்து ஓடி நிரம்பிட - 1456

ஒண்ணுதல் வியர்த்திட ஒளிமுக மலர்ந்திட
தண்ணிய உயிர்ப்பிணிற் சாந்தந் ததும்பிட - 1458

உண்ணகை தோற்றிட உரோமம் பொடிந்திடக்
கண்ணில் நீர் பெருகிக் கால்வழிந் தோடிட - 1460

வாய்துடித்து அலறிட வளர்செவித் துணைகளிற்
கூயிசைப் பொறியெலாம் கும்மெனக் கொட்டிட-1462

மெய்யெலாம் குளிர்ந்திட மென்மார் பசைந்திடக்
கையெலாம் குவிந்திடக் காலெலாஞ் சுலவிட - 1464

மனங்கனிந்து உருகிட மதிநிறைந் தொளிர்ந்திட
இமைப்பெறும் சித்தம் இயைந்து களித்திட - 1466

அகங்காரம் ஆங்காங் கதிகரிப் பமைந்திடச்
சகங்காணம் உள்ளந் தழைத்து மலர்ந்திட - 1468

அறிவுரு அனைத்தும் ஆனந்த மாயிடப்
பொறியுறு ஆன்மதற் போதமும் போயிடத் - 1470

தத்துவம் அனைத்தும் தாம் ஒருங்கு ஒழிந்திடச்
சத்துவம் ஒன்றே தனித்துநின் றோங்கிட - 1472

உலகெலாம் விடய உளவெலாம் மறைந்திட
அலகிலா அருளின் ஆசைமேற் பொங்கிட - 1474

என்னுளத்து எழுந்து உயிரெல்லாம் மலர்ந்திட
என்னுளத்து ஓங்கிய என் தனி அன்பே - 1476

பொன்னடி கண்டருட் புத்தமுது உணவே
என்னுளத்து எழுந்த என்னுடை அன்பே - 1478

தன்னையே எனக்குத் தந்தருள் ஒளியால்
என்னைவே தித்த என் தனி அன்பே - 1480

என்னுளே அரும்பி என்னுளே மலர்ந்து
என்னுளே விரிந்த என்னுடை அன்பே - 1482

என்னுளே விளங்கி என்னுளே பழுத்து
என்னுளே கனிந்த என்னுடை அன்பே - 1484

தன்னுளே நிறைவுறு தரமெலாம் அளித்தே
என்னுளே நிறைந்த என் தனி அன்பே - 1486

துன்புள அனைத்தும் தொலைத்து எனது உருவை
இன்புறு ஆக்கிய என்னுடை அன்பே - 1488

பொன்னுடம்பு எனக்குப் பொருந்திடும் பொருட்டா
என்னுளம் கலந்த என் தனி அன்பே! - 1490

என்னும் வரிகளில் மிகத் தெளிவாக விளக்கம் தந்துள்ளார். உடல் உயிர் ஆன்மா மூன்றும் அருள் ஒளியாக மாற்றம் அடைவதுதான் மரணம இல்லாப் பெருவாழ்வு என்பதாகும்.

அருள் அமுது அளித்தனை அருள் நிலை ஏற்றினை
அருள் அறிவு அளித்தனை அருட்பெருஞ்ஜோதி!

மரணத்தை வென்ற பாடல்!

காற்றாலே புவியாலே ககனமத னாலே
கனலாலே புனலாலே கதிராதியாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே
காளாலே பிறஇயற்றும் கொடுஞ்செயல்க ளாலே
வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்மெய்
அளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான் எனக்கே
ஏற்றாலே இழிவெனநீர் நினையாதீர் உலகீர்எந்தை
அருட்பெருஞ்ஜோதி இறைவனைச்சார் வீரே!

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை தொடர்பு கொள்ள வலியுறுத்துகிறார் வள்ளலார். வேறு தெய்வங்கள் எதற்கும் பயன் அற்றது என்கிறார். அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரால் மட்டுமே அருளை வழங்க முடியும். அருள் அறிவை அளிக்க முடியும். அருள் நிலைக்கு ஏற்ற முடியும். எல்லாவற்றையும் படைத்தவனால் மட்டுமே எல்லாவற்றையும் வழங்க முடியும் என்பதை அறிந்து புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த உண்மைகளை உணர்ந்து வாழ்க்கையில் கடைப்பிடித்தால் மட்டுமே மரணத்தை வென்று மரணம் இல்லாப் பெருவாழ்வு என்னும் பிறப்பு இறப்பு அற்ற பேரின்ப பெருவாழ்வில் வாழமுடியும்.



அன்புடன் ஆன்மநேயன்
**ஈரோடு கதிர்வேல்**
+91 9865939896

**விளைவினுள் விளையும் விளைவதில் விளையும்**
**அளையுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (640)**

## சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் பெரியகுறிச்சி, ஏலக்குறிச்சி மற்றும் சுவாமிமலை தருமச்சாலைகளில் நாள்தோறும் அன்னக்கஞ்சி வழங்கப்படும் காட்சி.










**முளையதின் முளையும் முளையினுள் முளையும்**
**அளைதர அமைத்த அருட்பெருஞ்ஜோதி (642)**

# விடியலில் விழிப்போம்!

எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் பேரருட் பெருங் கருணைக்குரிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுள்ளம் கொண்ட அன்பு சகோதர சகோதரிகளுக்கு இனிய வந்தனங்கள் பல!

"கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்ற வாக்கிற்கு ஏற்றார் போல இன்றைய பரந்த உலகில் பொய் பித்தலாட்டத்தை மெய் என்றும், மெய்யானவை எல்லாம் பொய்யென்றும் நம்பி பின்னால் வாடிப் போய் வாழ்ந்து கொண்டிருக்கும் மாந்தர்கள் ஏராளம். இன்றைய காலகட்டத்தில் விழிப்புணர்வு இல்லாத இளைஞர்கள், குறிக்கோள் இல்லாத கல்லூரி மாணவர்கள், இலட்சியம் இல்லாத இளைய சமுதாயத்தினரைத்தான் அதிக அளவில் நாம் கண்டு கொண்டு இருக்கிறோம். இன்றைய இளைய தலைமுறையினர் நினைத்தால் நாளைய இளைய பாரதமாய் வீறு கொண்டு எழ முடியும்.

இளைய சமுதாயத்திற்கு வழிகாட்டும் புத்தி பெற்றோர்களுக்கும், கையாளும் யுக்தி ஆசிரியர் பெருமக்களுக்கும் உண்டு. கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்பதைப் போல தங்கள் இஷ்டத்திற்கு வளர்ப்பதும், அதிக அளவில் செல்லம் கொடுப்பதும், பால பருவத்தின் போது இரத்தத்தில் ஊறியது போல இன்றைய இளைய தலைமுறையினர் இலட்சியம் இல்லாதவர்களாகவும், குறிக்கோள் இல்லாதவர்களாகவும், விழிப்புணர்வு இல்லாதவர்களாகவும் நம் பாரதத் திருநாடு கண்டு கொண்டிருக்கிறது.

சிறு பருவத்தில் குழந்தைகளுக்கு தர்மத்தை உணர்த்தக்கூடிய வழிமுறைகளையும், பண்பாடு, பாரம்பரியம், கலாச்சாரம் போன்றவற்றை பரப்பியிருந்தால் இன்றைய காலகட்டத்தில் 70 சதவீதம் இளைஞர்கள் மேனிலை அடைந்திருப்பார்கள். உலகம் சமநிலை பெறுவதற்கு 60% சதவீதமாவது எட்டியிருக்கும். மதுவிலக்கு சட்டமே இல்லாமல் மதுவை யாரும் பயன்படுத்தாத நிலை எட்டியிருக்கும். ஆனால் இன்று நடப்பது என்ன? உலக அளவில் இந்தியாவில் தான் மது பிரியர்கள் அதிய அளவில் உள்ளதாகவும், ஆனால் தமிழ்நாட்டில்தான் மது விற்பனை அளவில் முதலிடம் பிடித்திருப்பதாக சர்வே சொல்கிறது. குஜராத் மாநிலத்தில் மதுவிலக்கு சட்டம் தீவிரப்படுத்தும்போது மற்ற மாநிலங்களில் ஏன் தீவிரப்படுத்த முடியவில்லை?

நாட்டின் கண்மணிகளாக விளங்கக்கூடிய இன்றைய இளைய சமுதாயத்தினரை நல்வழியில் மாற்றும் சக்தி பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும்தான் உண்டு என்பதில் எள்ளவும் ஐயமில்லை. அன்பு இருக்கும் இடத்தில் வம்பு இருக்காது. நல்ல குணம் உள்ள இடத்தில் கடும் சினம் இருக்காது. பண்பு உள்ள இடத்தில் பகை வளராது. கனிவு உள்ள இடத்தில் கடுமை இருக்காது. தர்மம் உள்ள இடத்தில் அதர்மம் இருக்காது. எல்லாவற்றிற்கு மேலாக தூய அறிவு இருக்கும் இடத்தில் எக்காலத்திலும் தீயகுணம் உருவாகாது என்பதை நாம் அறிந்தாலொழிய போதாது, அதை செயல்படுத்தும் முறையை பெற்றோர்களும், ஆசிரியர்களும் கையாண்டால் மட்டுமே நல்வழிப்படுத்தி நல்லதொரு இளைய சமுதாயத்தை உருவாக்க முடியும். அதன் மூலம் இளைய சமுதாயத்தினரிடையே அன்பு, கருணை, இரக்கம், தயவு, ஒழுக்கம், அடக்கம், தூய அறிவு போன்ற குணங்கள் உருவாகி இயற்கையாகவே எல்லாவிதமான பேரின்ப பெருவாழ்வை பெற்று வாழ்வர். சிந்திக்கும் மனோபலம் பெருகும். அன்பால் ஆன்ம பலமும், அறிவால் தேகபலமும், தர்மத்தால் ஞான பலமும் பெற்று வாழ்வர். விழிப்புணர்வு, குறிக்கோள், இலட்சியம் இல்லாதவர்களையும் நாமே உருவாக்கிவிட்டு பிறகு மனம் நொந்து போவதால் நமக்கு என்ன பயன்?

"வெறுங்கை என்பது முட்டாள்தனம், விரல்கள் பத்தும் மூலதனம்" என்பதைப் போல எல்லோரும் எல்லாமும் பெறமுடியாது. மேலும் ஒவ்வொரு இளைஞரிடமும் தன்னை அறிய ஒரு மாபெரும் மனோசக்தி உள்ளது. அந்த மனோசக்தி அறிந்தால்தாம் எண்ணிய எண்ணப்படி எல்லாமே ஈடேறும். தர்மம், சத்தியம், ஒழுக்கம், அடக்கம் போன்றவை மனித மனோ சக்திக்குள் அடங்கிய நறுமணம் சுகந்த மலர்களாகும். அந்த மலர்கள் விரிவடைய வேண்டும் என்றால் மனம் சாந்தப்பட வேண்டும். சிந்திக்க வேண்டும். அன்பை காட்டிடல் வேண்டும். தெளிவு பெறல் வேண்டும். ஒழுக்கம் வேண்டும். அடக்கம் ஆகி இருத்தல் வேண்டும். திண்பதிலும் முறை ஒழுகுதல் வேண்டும். கருணை மழையில் நனைய வேண்டும். இன்சொல்லாடல் வேண்டும். அமைதி பெற வேண்டும். உள்ளொன்று

**வித்திடைப் பதமும் பதத்திடை வித்தும்**
**அத்துற அமைத்த அருட்பெருஞ்ஜோதி (644)**

புறமொன்று பேசுவது ஒழிய வேண்டும். பகலில் துயில் கொள்வதை தவிர்க்க வேண்டும். விடியலில் ஆன்ம அமைதி காண வேண்டும். அதிகாலையில் விழிக்க வேண்டும். பிறர் குற்றம் விசாரியாமல் இருக்க வேண்டும். அல்லாத பேச்சை தவிர்க்க வேண்டும். புலால் உண்பதை ஒழிக்க வேண்டும். மண்ணில் விளையும் இதமான உணவை உட்கொள்வதின் மூலம் மனிதனாக வாழ வேண்டும் போன்ற நெறிமுறைகளை வாழ்வில் இலட்சியமாக கொண்டு கடைப்பிடித்தால் நாம் விரும்பியவற்றிற்கும் மேலாக எல்லாவிதமான செல்வங்களை நமக்கு எல்லாம் வல்ல பரம்பொருள் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் அளிப்பார். மரணமிலாப் பெருவாழ்வை தந்தருள்வார் என்பதில் எள்ளவும் ஐயமில்லை. பாரம்பரியம், பண்பாடு, கலாச்சாரம் கண்ட நம் பாரத திருநாட்டின் இன்றைய நிலை என்ன என்பதை தங்களின் சிந்தனைக்கே குறிப்பாக இளைஞர்களிடத்தே விட்டுவிடுகிறேன். யாரால் இந்த நிலை என்பதை சற்று சிந்தித்து பாருங்கள்.

1. நாட்டிற்கு விடுதலை வாங்கித் கொடுத்து அஹிம்சா வழியில் போராடிய தேசப்பிதா காந்தியடிகள் கண்ட பாரதத்தின் இன்றைய நிலை?

2. தொழுநோயாளிகளின் பிணியை போக்குவதும், ஆதரவற்ற நிலைக்கு தள்ளப்பட்டு நோயாலும், பசியாலும் வாடிய முதியோர்கள் மற்றும் குழந்தைகளை அரவணைத்து காத்து வந்த அன்னை தெரஸா அவர்கள் கண்ட பாரதத்தின் இன்றைய நிலை?

3. தேசத்தின் விடுதலைக்காக நாட்டின் பல்வேறு மூலைகளில் இருந்து பல தியாகச் செம்மல்கள் ஒருமையோடு போராடி சுதந்திரம் பெறுவதற்காக எத்தனை துன்பங்களை அனுபவித்து வாழ்ந்தார்கள் என்பதை வரலாற்றில் அறிகின்றோம். அப்படிப்பட்ட பல தியாகச் செம்மல்கள் நமக்கு போதித்த தத்துவத்தை நாம் கடைபிடிக்கிறோமா?

4. சுதந்திர போராட்ட தியாகிகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் அவர்களின் சாதியை பயன்படுத்தி சாதிவெறி, இனவெறி, மதவெறியை நாம் பரப்பிக் கொண்டு வருகிறோமே! இதுதான் இன்றைய பாரதத்தின் சாதனையா? ஞானிகளின் பெயரால், சித்தர்களின் பெயரால் மக்களிடம் மூடநம்பிக்கை விதைத்து கொண்டு தற்பெருமை, சுயநலத்தோடு வாழ்கின்றோமே இதுதான் ஒற்றுமைக்கு வழிகாட்டும் வழிமுறைகளா?

5. ஒழுக்கத்தை போதித்த வள்ளல் பெருமான் கொள்கைகளை பின்பற்றுகிறோமா? அடக்கத்தை வலியுறுத்திய வள்ளுவரின் வாதத்தை கடைப்பிடிக்கிறோமா? ஒரு கன்னத்தில் அறைந்தால் இன்னொரு கன்னத்தை காட்டு என்றுரைத்த இயேசு பிரானின் வழிமுறைகளை ஏற்றுக் கொண்டோமா? நல்வழி மார்க்கத்தின் வழிமுறைகளை சொன்ன நபிகள் நாயகத்தின் சத்தியத்தை கடைபிடிக்கின்றோமா? அன்பை பறைசாற்றிய புத்தரின் போதனைகளை சிந்தித்தோமா? சற்று சிந்தித்து பாருங்கள்.

தர்மத்தை பற்றி எப்போது யார் வளர்க்கிறார்களோ, அந்த நேரத்திலே அவர்களிடம் உள்ள கர்மவினைகள் ஒழிந்துவிடும். தர்மத்தை உணரும்போது தந்தையாகவும், கடைபிடிக்கும் போது குருவாகவும், செயல்படுத்தும் போது கடவுளாகவும், எல்லாவற்றிற்கும் மேலாக சேவகராகவும் வாழ்கிறவர்கள் மரணமிலாப் பெருவாழ்விற்கு வழிவகுக்கின்றனர். எல்லாம் வல்ல பரம்பொருள் நமக்களித்த சத்திய சேவையாம் தூய அறிவையும், அன்பையும் நம் உள்ளத்தில் வேரூன்றி முளைத்து, சினத்தை தவிர்த்து, எச்செயலையும் நம் அகத்தில் உள்ள மனோ சக்தியால் மிக ஆழமாக சிந்தித்து தெளிவு பெறுவோம். தெளிவு பெற வழி தெரியவில்லையா? எல்லாம் வல்ல ஆண்டவர் அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானிடம் செல்லுங்கள். உள்ளொளி ஓங்கி உயிரொளி விளங்க வெள்ளொளி காட்டி, மெய்யருட் ஜோதியாம், ஞான ஜோதியை நமக்குள் காட்டி சிற்றறிவாயிருக்கின்ற நம்மையெல்லாம் பேரறிவாக மாற்றி, ஒழுக்க நெறிகளான இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம், பின்பற்றி வாழும் வழிமுறைகளை நமக்கு உணர்த்தி கருணை புரிவார். கோடி கோடியாய் செலவு செய்து யாக வேள்வி செய்ய வேண்டாம். கோவில் கோவிலாக ஏறி இறங்க வேண்டாம். புண்ணிய நதியும் இல்லை, பண்ணிய பாவமும் இல்லை. தன்னை அறிந்தால் ஜீவகாருண்யம் வழிமுறைகள் பின்பற்றி அகத்தை தூய்மைப்படுத்தி சத்திய வழியில் பயணிக்க தர்மப் பாதையில் பயணம் செய்யுங்கள். அல்லாத பேச்சை தவிருங்கள். அம்பலப் பேச்சை நாடுங்கள். தங்களை தாங்கள் அறியாதவரை போலி ஆன்மீகம்தான் பெருகி கொண்டு இருக்கின்றது. சத்சங்கம், சத்விசாரம், மேடைப்பேச்சு, யோக பயிலரங்கம்,

**பதமதிற் பதமும் பதத்தினுள் பதமும்**
**அதிர்வற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (646)**

ஞானிகளைப் பற்றிய தவறான தகவல்களை பரப்புதல் போன்றவைகளால் அறியாத மக்களிடம் தவறான மூட நம்பிக்கைகளை பரப்பிவரும் அன்பர்களை நம்பி ஏமாந்து வருகிறோம்.

இப்படி இருந்தால் நாம் எப்படி இயற்கை சக்தியை அறிய முடியும்? பெற முடியும்? ஆகவே இளைய சமுதாயமே விழித்துக் கொள்! சாதனை செய்ய வேண்டிய பருவத்தில் வேதனையை சுமக்காதீர்கள். தூய அறிவு, தூய அன்பு, இயற்கை விளக்கம், இயற்கை உண்மை, இயற்கை இன்பத்தையும் நம் அகத்தில் உள்ள மாபெரும் மனோசக்தியை அறிந்தால் மட்டுமே நம்மை நாமே விழித்துக் கொண்டால்தான் மரணமிலாப் பெருவாழ்வு வாழ்வதற்கு வழிவகுக்கும். எல்லாம் வல்ல பரம்பொருளாம் திருஅருட்பிரகாச வள்ளல் பெருமான் நமக்களித்த திருஅருட்பா எனும் சாகாக்கல்வி கற்று என்றும் விழித்திருப்போம். தயவுடன் வாழ்வோம். தர்மத்துடன் கைகோர்ப்போம். அல்லாத பேச்சை தவிர்ப்போம். அம்பலப்பாட்டின்படி செயல்படுவோம். பேச்சை குறைத்து செயலை பெருக்கினால் ஞானத்தை பெறமுடியும். தர்மத்தின் வழியில் சேவையை செய்தால் சன்மார்க்கத்தை அடைய முடியும்.

**தன்னை அறியும் அறிவு பேரறிவு!**
**பின்னை அறிவதெல்லாம் பேயறிவு!!**

**அறிவும், அன்பும் இருந்தால் – அவன்**
**உலகத்தையே ஆளலாம்!**

**அறியாமையும், ஆசையும் இருந்தால் – அவன்**
**உள்ளத்தைக்கூட ஆள முடியாது!!**

**சிந்திப்போம்–தெளிவு பெறுவோம்!!!**

கற்பனை கடந்த ஜோதி, கருணையே உருவமாகி அற்புதக் கோலம் கொண்டு ஜோதியுள் சுடராய், ஜோதிப் பிழம்பதோர் மேனியாகி நிற்கின்ற எம்பெருமான் தில்லையிலே ஆடும் தாண்டவத்தை மனித உள்ளத்தில் ஆட வைத்தவரும், மாக்களை மக்களாட்சியும், தீராத வினைகளை தீர்த்தும், மாறாத பிணிகளை போக்கியும், பசியால் வாடும் வறியவர்களின் பசிப்பிணியை நீக்கி வாழ்வளிக்க வந்த பரம்பொருள் ஆதியும், அந்தமும் கடந்த, பாதியும், முடிவும் இல்லா அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர், தனிப்பெருங்கருணை இறைவர் திருஅருட்பிரகாச வள்ளல் பெருமான் உலக உயிர்களுக்கு உறும் இடையூறுகளை நீக்கி மெய்ஞானத்தை அளித்த எம்பெருமானின் 146ம் ஆண்டு தைத்திங்கள் 17ம் நாள் (31.01.2018) புதன்கிழமை, தைப்பூச ஜோதி தரிசனம் காணும் இலட்சக்கணக்கான ஆன்மநேய ஒருமைப்பாட்டுள்ளம் கொண்ட அன்பு சகோதர, சகோதரிகளுக்கு எல்லா வளமும், நலமும், அளிக்கவும், வாழ்வில் வளம், அறிவில் ஞானம், அன்பில் மவுனம், செயலில் வீரம், தெளிவில் வேகம், சிந்தனையில் ஊக்கம், உள்ளத்திற்கு உற்சாகம் பெற்று பல்லாண்டு பல்லாண்டு பலகோடி நூறாயிரம் ஆண்டு வாழ்ந்து, தர்மத்தின் வழியில் மரணமில்லா பெருவாழ்வு பெற்றுவாழ தீபம் அறக்கட்டளையானது எல்லாம் வல்ல ஆண்டவரிடம் விண்ணப்பிக்கிறது.



தங்களில் ஒருவனாக...
**ஜோதி சதுரகிரியார்**
8939376652

# ஜோதி தரிசனம்

கடந்த 10 ஆண்டுகளாக தினசரி நூற்றுக்கணக்கானவர்களின் பசியைப் போக்கக் கூடிய நித்ய தீப அன்ன தருமச்சாலைக்கு ஜோதி தரிசன நாளில் வருகை தந்து, மாத பூச நாளில் 6 திரை நீக்கி ஜோதி தரிசனம் செய்து, அருளின்பம் பெற தங்களையும், தங்கள் குடும்பத்தினரையும் அன்புடன் அழைக்கிறோம்!

**வடலூர் தைப்பூச**
**ஜோதி தரிசனம்**
**31.01.2018 (புதன்கிழமை)**

**அடுத்த மாத பூச ஜோதி தரிசனம்**
**03.01.2018 (புதன்கிழமை)**
**இரவு 8.00 மணிக்கு**

**நித்ய தீப தருமச்சாலை**
7/8, புத்தேரிக்கரைத் தெரு, தண்டீஸ்வரம் கோவில் அருகில்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல் : 9444073635 / 044 - 2244 2515

**ஒற்றுமை வேற்றுமை உரிமைகள் அனைத்தும்**
**அற்றென வகுத்த அருட்பெருஞ்ஜோதி (648)**

**சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் வடலூர் சத்திய தருமச்சாலையில் மாத பூச திருநாளில் தொடர்ந்து 49-வது மாதமாக அணையா அடுப்பின் உலையில் அயராது உழைக்கும் ஆடுகின்ற சேவடிகள்.**











**பொருள்நிலை உறுப்பியல் பொதுவகை முதலிய**
**அருள்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (650)**

# அருட்பெருஞ்சோதி அகவல்

அனுபவப் பொருள் விளக்கம்

**திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா**

## 21. வேதாந்த வெளி

41. சுத்தவே தாந்தத் துரியமேல் வெளியெனும்
42. அத்தகு சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

(உ–வி.) எங்குமாய் நிறைந்திலங்கும் கடவுட்ஜோதி, சுத்த அருள் ஞானத்திற்கு அல்லாது, பிற எந்த ஒன்றிற்கும் வெளிப்பட்டு விளங்குவதாயில்லையாம். இந்த அருள் ஞானநிலையே சுத்த வேதாந்தமாகப் பகரப்படுகின்றது. இதற்குமுன் யோகாந்த வெளியாகவும் போதாந்த வெளியாகவும் உரைக்கப்பட்டவையும் கூட இந்த அருள் ஞானபீடத்தின் அடிப்படையாய் அடங்கியுள்ளனவாம். யோகாந்தம் – ஞானத்தில் ஞானநிலையைப் பதிவடிவாய்க் குறித்தது ; போதாந்தம் – மலபாசம் ஒழிந்தவிடத்து விளங்கும் நிலையைப் பதிவடிவம் என்றது. இங்கு சுத்தம் என்ற சொல் அருள் உண்மையையுணர்த்தி, அவ்வருள் மெய்ஞ்ஞான அனுபவ நிலையையே முடிவு செய்துள்ளதாம்.

அருளுடன் கூடிய சுத்த சத்விசாரத்தால் நமது சிற்சபையினிடத்தே அருட்பெருஞ் ஜோதிபதியைக் கண்டு போற்றிக் கலந்து நின்று விளங்குதல் வேண்டும். இவ்விசார் அனுபவம், சாக்கிரத்தே தொடங்கி, சொப்பனத்துக்கும் தொடர்ந்து, சுழுத்தியில், அசைவற நின்று மேல் துரியத்தில் சொல்லரிய மெய்யருள் உணர்வு மயமாய்த் திகழ்ந்து விளங்குவதாம். இப்படித்தான் சுத்த வேதாந்த வெளியிலே அருட்பெருஞ் ஜோதிபதி அனுபவம் பெறவேண்டி உள்ளதாம். இவ்வருணிலை பெறாது, மருள் தேகப் பற்றொடு கூடிய மனோ உணர்வு கொண்டு அகத்தே ஆன்மக் கூடியும், நிர்விகற்பசமாதி நிலையுற்றும் அடைந்துவிட முடியாது. எனவேதான் பழைய வேதாந்த வித்தகர்கள், பிரக்ஞானம் பிரம்மம் அகம் ஆத்மா பிரம்மம், தத்துவமசி, அகம்பிரம்மாஸ்மி என்ற வேதாந்த மகா வாங்கியங்களை நெடுநாட் பயின்றும், பாவித்தும் அந்தப் பிரம்மானுபவத்தோடு வாழாது கடந்து சென்றனராம்.

ஆகவே சுத்த அருள் விசாரத்துடன் இருந்து ஒருமையுற்று உள்ளொளியிற் கூடி நின்று, துரியானுபவம் பெற வேண்டுவது நம் கடமையாகும், அத்துரிய நிலையிலே அமிழ்ந்து கிடந்துவிடுவது கடவுளாணை அன்று, அந்தச் சுத்த நிலையிலிருந்து தயவோடு, அத்துரியானுபவம் கெடாது, அகநிலையை விடாது அனகதயா வாழ்வு வாழ வேணடும். இவ்வாழ்க்கை நிலையே சகச நிலை எனவும், சாக்கிராதீத நிலை எனவும், சுத்த சன்மார்க்க அனுபவநிலை எனவும் மொழியப்படும். இப்பேரனுபவ நிலையை எய்தவே வேதாந்த பரவெளியில் அருட்ஜோதியைப் போற்றுவோம்.

---

நித்ய தீப தருமச்சாலையில்

**மாதந்தோறும் முதல் சனிக்கிழமை சத்சங்கம்** (சொற்பொழிவு)

| | | |
|---|---|---|
| நாள் | : | 06.01.2018 (சனிக்கிழமை) |
| நேரம் | : | மாலை 6.00 மணி முதல் |
| தலைப்பு | : | **கடவுள் யார்?** |
| சொற்பொழிவாளர் | : | ஆன்மநேய செம்மல் **ஈரோடு கதிர்வேலனார்** அவர்கள் |
| இடம் | : | **நித்ய தீப தருமச்சாலை**<br>7/8, புத்தேரிக்கரைத் தெரு, தண்டீஸ்வரம் கோவில் அருகில்,<br>வேளச்சேரி, சென்னை – 600 042. செல் : 8939376652. |



**உறவினில் உறவும் உறவினில் பகையும்**
**அறன்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (652)**

# நித்ய தீப தருமச்சாலை

## கடந்த 10 - ஆண்டுகளாக, தினசரி நூற்றுக்கணக்கான பசியால் வாடும் வறியவர்களுக்கு, 19 தருமச்சாலைகள் மூலம்

# அன்னம் பாலிப்பு




நித்ய தீப தருமச்சாலை எண்.7/8 புத்தேரிக்கரை தெரு,
தண்டீஸ்வரம் கோவில் அருகில், வேளச்சேரி, சென்னை- 600 042.

**அன்னதான அறப்பணிக்கு அருட்கொடை தந்து நீங்களும் அருளின்பம் பெற அன்புடன் அழைக்கின்றோம்!**
**தங்கள் சக்திக்கேற்ப, விருப்பத்திற்கேற்ப அன்னம் தந்து மகிழலாம்!**

| | | | |
|---|---|---|---|
| காலையில் கஞ்சி வார்க்க | ரூ. 1,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 10,000/- |
| மதியம் உணவளிக்க | ரூ. 3,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 30,000/- |
| மதியம் சிறப்புணவு | ரூ. 5,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 50,000/- |
| ஒரு நாள் அன்னமளிக்க | ரூ. 6,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 60,000/- |
| 19 தருமச் சாலைகளிலும் அன்னமளிக்க | ரூ.19, 000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 1,90,000/- |

## முன்பதிவிற்கு தொடர்பு கொள்ளவும் : 044 - 2244 2515 / 94440 73635

Donations may be sent by crossed cheque to:

## DEEPAM TRUST

#30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.

**For Bank Transfer**

Bank / Branch : State Bank of India / IIT Branch
Current A/c. No. : 30265475129
IFSC : SBIN0001055

**பகையினிற் பகையும் பகையினில் உறவும்**
**அகைவுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (654)**

# வருமுன் காப்போம்

வந்த பின்னர் வாடுவதுதான் நமது வாடிக்கை. வந்த பின்னர் தவிர்த்தலுக்கு திட்டமிடுதலும், தற்காலிக தர்மவான்களாக செயலாற்றுவதும், கண்டிப்பதும், தண்டிப்பதும் எந்தப் பயனையும் இதுவரை அளிக்கவில்லை என்பதையும் நன்கு அறிவோம். வருமுன் காத்திடும் சித்தாந்தம் – உறுதிப்பாடு அனைத்து இடர்களுக்கும் பொருந்துமா? இயற்கைப் பேரிடர்கள் சொல்லிவிட்டா வருகிறது என தப்பிக்க விரும்புவோர் இன்னும் உளர்.

ஆனால், எத்தகு இடர் எத்தருணத்தில் ஏற்பட்டாலும் அவைகளை எதிர்கொள்ளும் உள்ளப்பாங்கினை – உறுதிப்பாட்டை அனைவரும் பெற்றிட என்ன செய்தோம்? என்ன செய்கிறோம்? வர இருக்கின்ற – வந்து அச்சுறுத்திய – அல்லல் பெருக்கிய பேரிடர்கள் பற்றி விவாதிக்கிறேன் என்று எண்ணி விடாதீர்கள்.

வருமுன் காக்க எனும் சொற்றொடர் எதிர்பாராமல் ஏற்படுகின்ற பேரிடர், பெருமழை, பெருவெள்ளம், பூகம்பம், நிலச்சரிவு, சாலை விபத்துக்கள், கட்டுப்படுத்த இயலாத காட்டுத்தீ, இவைகளை எப்படி எதிர்கொள்வது என்ற பொருளிலேதான் புரிந்து வைத்துள்ளோம். அத்தகைய இயற்கைப் பேரிடர் பற்றி விவாதிப்பதோ, விவரிப்பதோ இந்தக் கட்டுரையின் நோக்கம் அல்ல.

இயற்கைப் பேரிடர் காத்தல் அரசின் கடமை. வறுமை நீக்குதல் அரசினரின் அரும்பணி. பிணிகள் பீடிக்காமல் காத்தலும் அரசின் பொறுப்பு. வருமுன் காத்திடவும், வராமலே காத்திடவுமானவைகள் – தனிமனிதனால் மட்டுமே இயலக் கூடியவைகள் பற்றி சிந்திக்கத்தான் இந்தக் கட்டுரை.

வெள்ளம் வருமுன் அணைகட்டுதல் என்ற சொற்றொடரை நம்மில் பலர் அடிக்கடி உபயோகப்படுத்துகின்றனர்.

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். (குறள் 435)

எவை வருமுன்னர் காத்திடல் வேண்டும்? எந்த வெள்ளம் வருமுன் அணைகட்டிடல் வேண்டும். இதன் நுட்பமான பொருள் பற்றி சற்று விரிவாக சிந்திப்போம்.

அவ்வப்போது, நமது உள்ளங்களில் பெருகிடும் வெள்ளங்களை ஒவ்வொன்றாக அடையாளப்படுத்தட்டுமா?

நமக்குத் தெரியாமலே, நம்முள்ளே பெருகிடும் முதல் வெள்ளம் – அழுக்காறு – பொறாமை. இந்த வெள்ளத்திற்கு அணைபோடாதவர்கள் – அணை போட விரும்பாதவர்கள் பொறாமைத் தீயால் பொசுங்குவது திண்ணம்.

இரண்டாவது வெள்ளம் – வெள்ளமென பொங்கிடும் பேராசை. தேவைக்கு அதிகமாக – அபரிமிதமாக – அனைத்திற்கும் உரிமையாளனாக நானே இருக்கவேண்டும் எனும் அந்த ஆசை. இந்த வெள்ளத்திற்கு தக்க தருணத்தில் அணை கட்டத் தவறியவர்கள், தான் கெடுவதன்றி பெரும்பான்மையோரை ஏழ்மை வெள்ளத்தில் மூழ்கித் திணற வைக்கிறார்கள். இது கண்கூடு. கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லையே!

அபரிமிதமாக செல்வம் சேர்த்திடுதல்தான் சாமர்த்தியம். வாழ்வின் குறிக்கோளாக இயங்குவோர் பலரை இன்று காண்கிறோம். தேவைக்கும் அதிகமாக. மிக அதிகமாக, மிக மிக அதிகமாக செல்வம் சேர்த்துக் கொண்டே இருப்பது எதற்காக என்பது எமக்கு இன்னமும் புரியவே இல்லை.

மிடாஸ் என்ற ஒரு மன்னன் இருந்தானாம். இந்தக் கதையை தங்களில் சிலராவது ஏற்கனவே அறிந்திருக்கலாம்.

இந்த மன்னனுக்கு பொன் மீது அளவற்ற ஆசை. பொன் மீது கடும்பற்று கொண்ட மன்னன் மிடாஸுக்கு புத்தி புகட்டிட வேண்டும் என்று ஒரு தேவதை எண்ணியதாம். நல்ல மன்னனுக்கு இத்தகைய பேராசை அழகல்ல என்று எண்ணிய தேவதை, மிடாஸ் முன் தோன்றியதாம். உனக்கு என்ன வேண்டும். அப்படியே தருகிறேன் என தேவதை சொல்ல, மன்னன் கேட்ட வரம், நான்

**பாதியும் முழுவதும் பதிசெயும் அந்தமும்**
**ஆதியும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி (656)**

தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டும். அப்படியே ஆகும் என வரமளித்த தேவதை மறைந்தது.

மகிழ்ச்சி மிதப்பில், தனது அருமந்த புத்திரியைக் கூவி அழைத்தான். குதூகலமாக ஓடி வந்த குழந்தையை வாரி அணைத்தான். ஐயகோ! அது தங்கப்பதுமையாகி விட்டது. அழுது புரண்டான் மன்னன். தேவதை வருகைக்காக இன்னமும் அழுதுகொண்டே இருக்கிறானாம்.

பெருந்திரவியம் எதற்கு?

ஊருணி நீர் நிறைந்தற்றே, உலகவான் பேரறிவாளன் திருவள்ளுவர் ஊர் உண்ணும் நீர் தடாகம் நிரம்பினால், ஊர் மக்கள் மகிழ்வார்களல்லவா? அதுபோல் அறிவுடையார் செல்வமும் ஊர் மக்கட்கு மகிழ்ச்சியைத் தருமாம் என்கிறார். இன்றைய பெருந்திரவியத்தின் நோக்கமும் மக்கள் நலந்தான். தான் அதிகார பீடத்தில் தொடர வேணும். மக்கள் அடிவருடிகளாக இருக்க வேண்டும். இதுதான் இன்றைய நிலை.

மூன்றாவது வெள்ளம். கடுஞ்சினம். இந்த வெள்ளத்திற்கு அணை கட்டாவிட்டால் அன்றாடம் அவமானங்களை ஏற்க வேண்டியது மட்டுமல்ல – நிம்மதியிழந்து – பிணியாலும் அவதிப்பட நேர்வது உறுதி.

நான்காவது வெள்ளம் – பிறர் மீது வெறுப்பை உமிழ்வது – பணிவின் பகைவன். ஆணவத்தின் உற்ற தோழன்.

இந்த வெள்ளத்திற்கு அணைபோட இயலாதவர்கள் வெகுவிரைவில் அணைந்து போகிறார்கள்.

இந்த நான்கு வெள்ளங்களின் உற்பத்தி ஸ்தானம் எங்கிருக்கிறது. புரிகிறதா?

அணைகட்ட அரசின் உதவி கோரமுடியாது. போராட்டங்கள் நடத்தி வெற்றி காண இயலாது. முழுக்க, முழுக்க முழுப் பொறுப்பும் நம்முடையது என்பதை உணர்வோம்.

வெள்ளத்தின் உற்பத்தி நம்மிடம். வெள்ளத்தின் அளவும் வேகமும் நம்முடைய கட்டுப்பாட்டில் தானே இயங்கும். அணை கட்டிடும் பொறுப்பும் கடமையும் நம்முடையது தானே! வருமுன் காக்க வேண்டியவை நான்கு. வராமலே காக்க வேண்டியவை இரண்டு. இன்னாச்சொல் – வன்செயல்.

தனிமனிதனால் எளிதாக நிறைவேற்றக் கூடியவைகளைத் தானே விவரித்தேன். வருமுன் காத்திடுவோம்!!

இன்னுமோர் விண்ணப்பம். சில நிமிடங்கள்தான். தொடர்ந்து படியுங்கள். ஒரு சுவையான கனவு கண்டேன். தங்களிடம் பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

ஆண்டவனிடத்தில் நான் நெடுநாட்களாக முறையிட்டுக் கொண்டுள்ள, அவரால் மட்டுமே சரி செய்யக் கூடிய படைப்புக் குறைபாடுகள் :

சற்று விளக்கமாகவே சொன்னால், காணார், கேளார், கால்முட்பட்டோர், மனநலம் குன்றியோர், மந்தபுத்தியுடையோர் என எவ்வளவு பேர், ஏன் பிறந்தோம் – ஏன் வாழ்கிறோம் என அல்லல்படுவதைக் காண நேரும்போதெல்லாம் நெஞ்சில் இரத்தம் வடிகிறது என்று சொன்னால் மிகையாகாது.

எனது முறையீட்டை செவிமடுத்த ஆண்டவர் எனக்கு அரசோச்சும் வாய்ப்பை நல்கினார். கனவு துவங்குகிறது. அரசோச்சும் பொறுப்பேற்ற பின், முதல் பணியாக நான் செய்தது : தொண்டுள்ளம் கொண்ட வல்லுனர்கள் தேர்வு. என் விருப்பத்தை அவர்களிடம் சமர்ப்பிக்கிறேன். தக்க திட்டம் தயாரித்திடுமாறு பணிக்கின்றேன். திட்டமும் சமர்ப்பிக்கப்படுகிறது; விரைவாக. முதல் கையெழுத்தும் இடுகிறேன் மகிழ்ச்சியோடு.


என்ன திட்டம்? அறிய ஆவலாக உள்ளீர்கள் அல்லவா? தமிழகத்தின் 32 மாவட்டங்களிலும், ஒரு மாவட்டத்திற்கு பத்து கருணை இல்லங்கள் என மொத்தம் 320 கருணை இல்லங்கள். ஒவ்வொன்றும் ஒரு சிறு கிராமம் போல பத்து காணி நிலத்தில் அமைக்கப்பட்டன. அந்த இல்லங்களில் நூறு மாற்றுத் திறனாளிகள் அனைத்து அடிப்படை வசதிகளோடும், அல்லலின்றி, அலைச்சலின்றி

**துணையும் நிமித்தமும் துலங்கதின் அதுவும்**
**அணைவுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (658)**

ஆனால் தக்க உழைப்பினை நல்கி அமைதியாக - ஆரோக்யமாக வாழ்வதைக் கண்டேன். களிப்புற்றேன்.

இவர்கட்கு துணையும் - வழிகாட்டிகளும் வேண்டுமல்லவா? அறுபதைத் தாண்டியவர்கள், சிலரல்ல, மிகப் பலர், வீடும் வெளியேற்றத் தயங்கும் நிலை - காடும் வரவேற்கத் தாமதிக்கும் நிலையில், ஏதாவது தொண்டு செய்து வாழ்வை அர்த்தமுள்ளதாக ஆக்கிட ஏங்கிக் கொண்டிருப்போரை வரவேற்று இந்த இல்லங்களில் தொண்டற்ற அனுமதி வழங்கப்பட்டது. ஒரே ஒரு நிபந்தனை. ஒரே ஒரு மாற்றுத்திறனாளி கூட வாழ்வைச் சுமையாகக் கருதாமல் சுகமாக நடத்திட உதவுவது. பாரதியாரின் காணி நிலம் கனவு போல, ஒரு கிராமத்தில் காணாரும், கேளாரும் கால் முடப்பட்டோரும் தொண்டாற்றும் முதியோரோடு மகிழ்ச்சியாக ஏதோ ஒரு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதை பார்த்த வண்ணம் இருக்கும் போது பொழுது புலர்ந்தது. ஆண்டவருக்கு நன்றி சொன்னேன்.

கனவை விமர்சிக்க விரும்புவோரின் கருத்தைக் கேட்டிட காத்திருக்கிறேன். எளியேனின் கனவு நனவாகப் பிரார்த்திப்போம். இசைத்த போதெல்லாம் நின் அருள் வலத்தால் நண்ணும் அவ்வருத்தம் தவிர்க்க நல்வரந்தான் நல்குதல் எனக்கிச்சை எந்தாய்.



**இலட்சுமணசாமி**
இராணிப்பேட்டை
08056438488

சென்னை வேளச்சேரி

## தீபம் அறக்கட்டளையின்
## வடலூர் சத்திய தருமச்சாலை சேவைப் பயணம்

அன்பார்ந்த ஆன்மநேய உடன்பிறப்புக்களே!

சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் வடலூர் சத்திய தீப தருமச்சாலையில் மாதந்தோறும் ஜோதி (பூசம்) தரிசன நாளில் காய்கறி வெட்டுவதற்கும், சமையல் பணிக்கும் தீபத்தின்ஆடுகின்ற சேவடிகள் பங்கு பெறுகிறார்கள். வருகின்ற 03.01.2018 புதன் கிழமை ஜோதி தரிசன நாளில் 50வது மாத சேவைப்பயணம் நடைபெறுகிறது. அதுசமயம் 02.01.2018 செவ்வாய் இரவு சென்னை வேளச்சேரி நித்திய தீப தருமச்சாலையில் இருந்து **ஸ்லீப்பர் கோச் வேன்** புறப்படுகிறது. இலவச சேவைப்பயணம் அனைவரும் பங்கு பெற்று ஆன்மலாபம் அடைந்து இன்புற்று வாழ அன்புடன் அழைக்கின்றோம்.

**முன்பதிவு அவசியம்**
**கட்டணம் இல்லை**

மாத பூச நாள்
**03.02.2018**

வேன் புறப்படும் இடம்
**நித்ய தீப தருமச்சாலை**
வேளச்சேரி, சென்னை - 42.

புறப்படும் நாள் & நேரம்
**02.02.2018 / இரவு 9 மணி**

தொடர்புக்கு
ஆன்மநேயன் V. **பாரதி,** பொதுச்செயலாளர்
தீபம் அறக்கட்டளை, வேளச்சேரி, சென்னை - 600 042.
கைப்பேசி : 99410 35743 / 044-2244 2515

**உருவதின் உருவும் உருவினுள் உருவும்**
**அருள்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி (660)**

**சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில்,
தீபத்திற்கு வாரி வழங்கும் தயவாளர்களும் மற்றும் ஆடுகின்ற சேவடிகளும்
இயற்கை எழில் கொஞ்சும் ஜவ்வாது மலையில்... பசியாறும் அற்புதக்காட்சி.**





**சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் நித்ய தீப தருமச்சாலையில்
விஷேச நாட்களில் தலைவாழை இலையில் அறுசுவை உணவும்
பசியாறும் அன்பு உள்ளங்களும்...**

RNI : TNTAM / 2010 / 35284
"REGISTERED" LICENSED TO POST WITHOUT PREPAYMENT UNDER WPP NO. TN/PMG/(CCR) / WPP-290/2017-2019
R.No.TN/CC(S)Dn/412/17-19
Posted at Patrika Channel, Egmore, Chennai - 600 008. | Date of Publication : 20th of Every Month.
**Published by :** M. Balakrishnan on behalf of Deepam Trust, #30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042 and **Printed by :** RK. Shekaar at Sree Offset Printer, No. 840, Anna Salai, Saidapet, Chennai - 600 015. **Editor : M. Balakrishnan**



சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் நித்ய தீப தருமச்சாலையில் விஷேச நாட்களில் சிறப்பு அன்னம் தலைவாழையிலையில் வழங்குவதற்கு தயாராக இருக்கும் அற்புதக் காட்சி.

தீபம் அறக்கட்டளையின் நித்ய தீப தருமச்சாலையில் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமாய் அன்னத் தொண்டிற்கு தன்னையே அர்ப்பணித்திருக்கும் நடமாடும் காரைக்கால் அம்மையாரும், சென்னையின் அன்னை தெரெசாவுமான தயவுமிகு **மின்னல் அம்மா** அவர்கள்.



If undelivered Please Return to:

**DEEPAM TRUST**
(REDG. No. - 2035/07)
#30, Drowapathi Amman Koil Street,
(Next to Mosque), Velachery, Chennai - 600 042.
Phone : 044 - 2244 2515 | Cell : +91 94440 73635
E-mail : admin@deepamtrust.in
Web : www.deepamtrust.org

To
Shri. / Smt. / Dr.

Posted at Patrika Channel
Posted on 27-12-2017
Egmore, Chennai - 8